முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1672

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.04.2024**, சனிக்கிழமை

1. அண்ணலே கலியுகம் காக்கவந்த
ஆறுமுக அரங்கமகா ஞானியே
மண்ணுலகம் உன் தர்மத்தால் காக்கப்படுமென
மகான் சுப்ரமணியப்பெருமான் யானும் அருளியே
2. அருளியே அரங்கன் உமக்கு
குரோதி தகர் திங்கள்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 14 ம் நாள், 27.04.2024, சனிக்கிழமை)
ஆற்றல்கூட ஞான அறிவுரை
ஆசிதனை உரைப்பேன்
3. வரமென அரங்கனுக்கு நித்தம் நித்தம்
வல்லமை கூடிட சக்தி அருளி வருகின்றேன்
வருகவே கிரக நிலைபாடுகள்
வகைபட உலகோரின் தொடர்பு சார்ந்த
4. வகையான வல்லமை வழி
அரங்கனுக்கு சில சோர்வுகளும்
தருகின்ற நிலைகள் வந்தபோதும்
தக்கபடி தண்டாயுதன் யான்
5. பெருமைமிக்க ஆற்றல் கூட்டி
பிரணவ சக்தியாகி அரங்கனை ஆற்றல்பட இயங்க அருள்புரிவேன்
அருளவே அரங்கன் வந்த நோக்கம்
ஆற்றல்மிக்க சீடர்படை மூலம்
6. வரமென கலியுகத்தில் அரங்கேறும்
வல்லமைபட மகான்கள் அத்துனைபேரும் விரும்புகின்ற
விரும்புகின்ற ஞானவான்கள் தலைமையும்
விரைந்து ஞானிகள் வெளிப்படும் ஆட்சியும்

7. களங்கமற உலகமெங்கும் அரங்கேறி
கலியுகத்தில் ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சி
தர்மவான் அரங்கன் அவதார நோக்கமாக
தரணியில் பூர்த்தியாகக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—